E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

# செவ்வியல் இலக்கியங்களில் நீரின் ஆளுமைத்திறன்

## Influence of Water in Classical Literature

**முனைவர் வெ. நளினி,** தலைவர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 600078, தமிழ்நாடு, இந்தியா.

**Dr. V. Nalini,** Head & Assistant Professor, Department of Tamil, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research, Chennai-600078.Tamilnadu, India.

**ORCiD: https://orcid.org/0000-0001-7235-8229**

**DOI: 10.5281/zenodo.10590858**

## Abstract

*Tamil landscape is surrounded by natural resources in ancient days. Nature is the greatest treasure and boon given by God to human beings. The five Panchabhutas (elements) are earth, water, fire, air and sky. Tamil people revered them. Nature is the principle of all actions. The five elements earth, water, fire, air, and water work together in all. The body of all living beings functions in relation to it. From the one-sense beings like grass and trees to the six-sense beings like man water functions vitally. The wealth of land depends according to the liveliness of the water. Tamil people gave more importance to water and preserved it in many ways. Indeed, the entire world is full of beautiful landscapes surrounded by oceans. On all sides trees spread like green blankets; forests with flowers blooming like butterflies, waterfalls like silver threads and rivers running like deer are the special features of nature. Without water, one cannot see this live interaction of nature with the parts of nature. Tamil literature has recorded many glimpses of water in works from the Sangam age to the present age of Tamil criticism. Hence, this article is intended to reveal the importance of water from authentic sources from literature and research.*

**Keywords:** Sangam Literature, Ecosystems, Water, Water Pollution.

**ஆய்வுச் சுருக்கம்**

*பரந்து விரிந்த இப்புவியானது இயற்கை வளங்களால் சூழப்பட்ட ஒன்றாகும். கடவுள் மனிதர்களுக்கு கொடுத்த மிகப்பெரிய பொக்கிஷமாகவும் வரமாகவும் இயற்கை அன்னை திகழ்கின்றாள், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐந்தும் பஞ்சபூதங்கள் ஆகும். தொல்காப்பியர் ஐம்பூதம் என்பதற்கு ஐந்து மூலப் பொருள்களான நிலம், நீர், தீ, வளி, வான் எனவும் இயற்கை என்பதற்கு இயல்பான தன்மை வழக்கம் இலக்கணம் நிலைமை கொள்கை ஆகும். எனவும் பொருள் கூறுகின்றார். புல் மரம் முதலான ஓர் அறிவு உயிர்கள் முதல் மனிதன் ஈறான ஆறு அறிவு உயிர்கள் வரையிலும் அனைத்து உயிரினங்களின் உடலானது நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் ஆகிய ஐந்து ஆதாரங்களின் அடிப்படையில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.இயற்கையின் அழகிய நிலப் பரப்பானது அதன் நான்கு திசைகளிலும்*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

*சூழ்ந்த சமுத்திரங்கள் பச்சை நிற போர்வை போல அமைந்திருக்கும் காடுகள் வண்ணத்துப்பூச்சி போல பூத்துக் குலுங்கும் மலர்கள் வெள்ளிக்கம்பிகள் போன்ற நீர்வீழ்ச்சிகள் மான் போன்று துள்ளி ஓடும் ஆறுகளை கொண்டுள்ளது இத்தகைய இயற்கையின் அம்சங்களில் ஒன்றானதும் வள்ளுவப்பெருமானால் போற்றப்படும் நீரின் இன்றியமையையும், தற்கால அறிவியல் யுகத்தில் அவை மாசுபாடு அடைவதையும் அவற்றிலிருந்து எந்தெந்த வழிகளின் மூலம் நீர் மாசுபாட்டினை தடுக்கலாம் என்பதற்காண வழிமுறைகளையும் வெளிப்படுத்தும் வகையில் இக்கட்டுரையானது அமைக்கப்பட உள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க இலக்கியம், சூழல் அமைப்புகள், நீர்வளங்கள், நீர், நீர் மாசுபாடு.

**முன்னுரை**

பரந்து விரிந்த இப்புவியானது இயற்கை வளங்களால் சூழப்பட்ட ஒன்றாகும். கடவுள் மனிதர்களுக்கு கொடுத்த மிகப்பெரிய பொக்கிஷமாகவும் வரமாகவும் இயற்கை அன்னை திகழ்கின்றாள், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐந்தும் பஞ்சபூதங்கள் ஆகும். தொல்காப்பியர் ஐம்பூதம் என்பதற்கு ஐந்து மூலப் பொருள்களான நிலம், நீர், தீ, வளி, வான் எனவும் இயற்கை என்பதற்கு இயல்பான தன்மை வழக்கம் இலக்கணம் நிலைமை கொள்கை எனவும் பொருள் கூறுகின்றார். நிலம், நீர், தீ , காற்று விசும்பு என்று ஐந்தும் கலந்த மயக்கமே உலகம் என்ற அடிப்படை உண்மையைக் கண்டறிந்த தமிழன் ஒவ்வொன்றிற்கான சிறப்பு தன்மைகளையும் தனித்தனியே குறிப்பிடவும் தவறவில்லை, அதேபோல, ஐம்பூதங்களின் இயல்புகள் மிகுந்தாலும் குறைந்தாலும் அவற்றால் ஏற்படும் விளைவுகளையும் கணித்து வைக்கவும் தவறவில்லை. இயற்கையைப் பற்றியும் ஐம்பூதங்கள் பற்றியும் நுட்பமான பல உண்மைகள் இலக்கியங்களிலும் தொல்பொருள் எச்சங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**நீர்**

தமிழ் மரபு இயற்கையை முன்னிறுத்தியது. தொல்காப்பியம் நிலத்தையும் பொழுதையும் முதல் பொருள் என்கிறது. நிலத்தை உயிர்ப்பிக்கவும் இயங்கச் செய்யவும் அடிப்படையாக அமைவது நீரே ஆகும். புறநானூற்றின் கடவுள் வாழ்த்துபாடலைப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவபெருமானை துதிக்கும் பாடல் ஒன்றில் நீரின் பெருமையை பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார். எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய, **நீர் அறவு அறியா கரகத்துக் / தாழ்சடை பொலிந்த அருந்தவத் தோற்கே (புறநானூறு, கடவுள் வாழ்த்து)** எல்லா உயிர்களுக்கும் காவலாக விளங்குகிற அருள் உடைமைப் பண்பாக வெளிப்படுகின்ற நீரை சிவபெருமான் தன் தலைமுடியில் சூடி இருப்பதினால் நீரின் பெருமையை இதன் மூலம் அறிய முடிகிறது. இத்தகைய இயற்கையின் அம்சங்களில் ஒன்றானதும்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு (திருக்குறள் - 20)**

என்று வள்ளுவப் பெருமானால் போற்றப்படும் நீரின் இன்றியமையாமையையும், தற்கால அறிவியல்யுகத்தில் அவை மாசுபாடு அடைவதையும் அவற்றிலிருந்து எந்தெந்த வழிகளின் மூலம் நீர் மாசுபாட்டினை தடுக்கலாம் என்பதற்கான வழிமுறைகளையும் வெளிப்படுத்தும் வகையில் இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**வளங்களின் முதன்மை நீர்**

ஒரு நாட்டின் மிகப்பெரிய இன்றியமையாத வளங்களில் முதன்மையாக சுட்டப்படுவது நீரே ஆகும். நீரின்றி அமையாது உலகு எனும் பொன்மொழி பொதுவானது என்றாலும் ஒரு நாட்டின் வளமும் நீரின்றி அமையாது என்பதே சிறப்பு மிகுந்த படைவளங்களை பெற்றிருப்பதாலும் தொடர்ந்து போர் வெற்றியினால் மட்டும் ஒரு நாடு சிறந்து இருக்க முடியாது என்பதை,

**தண்புனல் பரந்த பூசல் மண் மறு**
**மீனின் செறுக்கும் யாணர்ப் பயன்திகழ் வைப்பின்**
**பிறர் அகன்றலை நாடே (புறநானூறு, பா. 7)**

என்று கட்டுக்கடங்காது பெருகிவரும் நீரை முறைப்படுத்தி வளமுடையதாக்கும் ஊர்கள் நிறைந்த நாடே என்று பாடி இருப்பதிலிருந்து அறிய முடிகிறது. ஒரு நாட்டின் வளத்துக்கு அடிப்படையாக அமைவது வேளாண் தொழிலே ஆகும். எனவே, பிற நாட்டின் மீது படையெடுக்கும் மன்னர்கள் அந்நாட்டின் வளத்தை அளிக்க வேண்டும் என்றால் முதலில் செய்வது யானைகளை விடுத்து நீர் நிலைகளைத் துய்ப்பதே ஆகும். இதனை,

**ஒளிறு மறைப்பின் களிறு அவர**
**காப்புடைய கயம் படியினை (புறநானூறு, பா. 9)**

என்று புலவர்கள் போற்றி பாடுவதன் மூலம் நீர் வளத்தின் இன்றியமையாமையை அறிய முடிகிறது. ஏனெனில், வேளாண் தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது நீர் நிலைகள் ஆகும்.

**உயிருக்கு உணவாகும் நீர்**

நீர் உணவு மட்டுமின்று அதுவே விருந்தோம்பலின் முதலாகவும் திகழ்கிறது இல்லத்திற்கு வந்திருக்கும் விருதினருக்கு முதலில் நீர் தந்து ஓம்புதலே தமிழர் மாண்பு ஆகும். ஆதலால் நீர் பெருமையும் உரிமையும் உடையது ஆகும். விருந்தினர் இல்லத்திலேயே உரிமை பொருளாகவும் நீரை பகைவர் சிறையில் இறந்து பெற வேண்டுமோ என்று கருதி மானத்திற்காக உயிர் துறந்த சேரமான் கணைக்கால் இரும்பொறையின் பாடல் காட்டுகிறது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

மேலும் உலகத்து உயிர்களின் உடல் என்பது நீர்மையை வேண்டுவது அத்தகைய உடலுக்கு உணவு சென்றாலே உயிர் சிறந்த இயங்கும். அத்தகைய உணவினை தருபவரே உயிர் தருபவர் ஆவார். உடலுக்கு உணவை தருவது நிலம் என்றால் நிலத்துக்கும் உடலுக்கும் முதல் உணவாக விளங்குவது நீர் தான். ஆதலால் உணவை பெருக்கும் வழியாக நீரையும் நிலத்தையும் மேம்படுத்தவேண்டும் என்ற செய்தியினை,

**நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (புறநானூறு, பா. 18)**

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. நம் உடலில் 72% நீரும், 12% நிலமும், 6% காற்றும், நான்கு 4% நெருப்பும், மீதி 6% ஆகாயமும் உள்ளன. இதில் நீர் தான் அதிக ஆளுமையை எடுத்துக் கொண்டுள்ளது என வேதாந்த மகரிஷி கூறுகிறார்.

**நீர் நிலைகள்**

நீர்நிலை (Water Bodies) என்பது எல்லா வகையான நீரின் தொகுப்புகளையும் குறிக்கும். இது பொதுவாக புவிபரப்பின் மீது காணப்படும் நீர்நிலை என்ற சொல் சமுத்திரங்கள், கடல், ஆறுகள், நீரோடைகள், சுனைகள், மடுக்கள் போன்ற இயற்கையான நீர்நிலைகளையும், ஏரிகள், குளங்கள், அணைகள் போன்று மனிதர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட நீர் நிலைகளையும் குறிக்கும்.

**தொடிமாண் உலக்கை ஊழின் போக்கி**

**உரல் முகம் காட்டிய சுரைநிரை கொள்கை**

**குடவர் புழுக்கிய பொங்கு அவிழ்ப் புன்கம் (அகம்., நித்திலக்கோவை, பா. 393)**

என்ற பாடல் வரிகளின் மூலம் நீர்நிலைகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டன என்பதை அறிய முடிகிறது. மேலே கொடுக்கப்பட்டுள்ள நீர் நிலைகளில் ஒன்றான சுனைநீர் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். சுனை என்பது தானே நீர் கசிந்த நிலப்பகுதிகள் ஆகும். இது இயற்கையின் நீர்நிலைகளில் ஒன்றாகும். பொதுவாக மலைகளின் காணப்படும் நீர்நிலை சிறு அருவி போலவும், சிறுகுளம் போலவும் தேங்கியும் காணப்படும். பொதுவாக சுனைகள் குறிஞ்சி நிலத்து நீர்நிலைகளில் ஒன்றாகும். சுனை நீர் மிகவும் சுவை மிகுந்த நீராகவும் தமிழ் இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளது சான்றாக இன்தீம்பைஞ்சுனை என்றும் தீம்பெரும்பைஞ்சுனை என்றும் அழைக்கப்படுவதிலிருந்து சுனைநீரின் சிறப்பானது வெளிப்படுகின்றது.

**நீரினை சேமிக்கும் வழிகள்**

நீர் சேமிக்கும் வழிகளைப் பற்றிய செய்திகளை இப்பத்தியில் காணலாம். தமிழர்கள் நீரை பலவாறு சேமித்து உள்ளனர்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

**ஆறு, அணை, குளம், ஏரி, ஏந்தல், வாய்க்கால், கிணறு ஆகிய நீர் நிலைகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. நீர்த் தேக்கங்களிலிருந்து குமிழி, தூம்பு, மடை, மதகு, கண், வாய், துளை ஆகியவற்றின் வழியாக நீர் பாய்ந்து நிலத்தை அடைகிறது. வாய் என்பது மதகு. நீரைக் கொண்டு செல்லுவது 'கால்' எனப்படும். வாயிலிருந்து செல்லும் கால் 'வாய்க்கால்' ஆயிற்று. (6.1 நீர்நிலைகள்)**

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்கள் இயக்கத்திற்கும் நீரே முதன்மை ஆதாரமாகும், மானுட வாழ்வின் உயிர்நாடியே நீர் வளம் அதனை அன்றும் இன்றும் என்றும் நமக்கு பயனளிக்கும் வகையில் சேமிப்பதற்கான உத்திகளை செயல்படுத்துவது நீர் மேலாண்மை திறனாகும். அவ்வகையில் நம் தமிழர்கள் நீர் மேலாண்மையில் மற்ற நாட்டவர்க்கு முன்னோடியாக வாழ்ந்துள்ளனர். ஒரு நாட்டின் வளத்தை அறிய நீர் நிலையே மையமாக அமைகிறது. நீர் நிலைகளை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். இதனை,

**வரப்புயர நீருயரும்**
**நீருயர நெல்லுயரும்**
**நெல்லுயரக் குடியுயரும்**
**குடியுயர கோலுயரும்**
**கோலுயரக் கோனுயர்வான் (நான்மணிக்கடிகை, பா. 38)**

எனும் பாடலில் நீரின் அவசியத்தை ஔவையார் எடுத்துரைக்கிறார். இத்தகைய நீரின் மகத்துவத்தை அறிந்து நம் முன்னோர்கள் பல்வேறு யுத்தி முறைகளை கையாண்டதை அறிய முடிகிறது. நீர் நிலைகளில் உள்ள கனரகத் தன்மை அழியாமல் இருப்பதற்காக பல்வேறு பாதுகாப்பு முறைகளையும் நடவடிக்கைகளையும் அக்கால மக்கள் கையாண்டுள்ளனர். **சான்றாக வழக்கறும்பு என்றும், சாகர குச்சி என்றும் அழைக்கப்படும் புல் வகையினை நீரோடையின் இரு புறக்கறைகளிலும் வளர்த்து வந்தனர். (நா. மோனோலிசா ப. 58)** மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றி நீரை சேமிக்க வேண்டும்.

**மடை**

'மடை திறந்த வெள்ளம் போல்' என்ற முதுமொழிக்கேற்ப 'மடை' என்பது நீர்நிலை சேமித்தலும் தேவைப்படும் பொழுது அதனை பயன்படுத்துவதற்குரிய நீர்த்தேக்க நிலையாகும். நீர்சேமிக்கும் மடை ஒன்று ஒரு நாட்டில் இல்லை என்றால் அந்நாட்டின் இயற்கை வளம் அழியும் என்று இயற்கை வளத்தை பாதுகாப்பதற்கு நீர்நிலைகளை சேமிப்பதற்கான வழிகளை கையாண்டால் மட்டுமே நீர்நிலைகள் பாதுகாக்கப்படும். ஒரு நாட்டிற்கு எதிரியின் படைகளால் அழிவு ஏற்படாவிட்டாலும் நீர் சேமிப்பு மடை இல்லையெனில் பெரும் அழிவு ஏற்படும் என்பதை எச்சரிப்பாக கூறுகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

**போரின்றி வாழும் பொருநர்சீர் கீழ்விழுந்த**
**வேரின்றி வாடும் மரமெல்லாம் - நீர்பால்**
**மடையின்றி நீள்நெய்தல் வாடும் படையின்றி**
**மன்னர் சீர்வாடிவிடும் (நான்மணிக்கடிகை, பா. 44)**

என்ற பாடல் உணர்த்துவது இயற்கை வளத்தை பாதுகாப்பது நீர்நிலை. அதனை சேமிப்பதற்கான வழியினை கையாண்டால் மட்டுமே அவ்வளம் குன்றாது ஒரு நாட்டிற்கு எதிரியின் படைகளால் அழிவு ஏற்படாவிட்டாலும் நீர் சேகரிக்கும் மடை இல்லை எனில் பெரும் அழிவு ஏற்படும் என்பதை இப் பாடலானது மெய்ப்பிக்கிறது.

**ஏரி (குளம்)**

நீரினை சேமிப்பதற்குரிய வழிகளில் மிகவும் முக்கியமான ஒன்றாக ஏரிகள் பயன்படுகின்றன. ஒரு நாட்டில் நீர்வரத்து மிகுந்து வரும் காலங்களில் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அதனை உள்வாங்கும் பெரிய குளங்கள் இருப்பதே நன்மை பயக்கும். இது வெள்ளப்பெருக்கு அபாயத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்காகவும் நீர் இல்லாத காலங்களில் தேவைப்படும் நீரினை பாசனத்திற்கு பயன்படுத்தும் நோக்கத்திற்காகவே இத்தகைய ஏரிகளை அக்காலத்திலேயே உருவாக்கினர். இதனை,

**யாருள் அடங்கும் குளமுள வீறுசால்**
**மன்னர் விளையுங் குடியுள (நாண்மணிக்கடிகை, பா. 54)**

எனும் பாடல் வெளிப்படுத்துகிறது மேலும் இந்த உண்மையை காவிரி கொள்ளிடம் ஆறுகளில் உள்ள சோழ நாட்டின் மூன்று பெரிய அணைகளில் இருந்து வெளியேறும் வெள்ள நீர் அனைத்தும் வீரநாராயண பேரேரியைச் சென்றடையுமாறு திட்டமிட்டுள்ள நீர் மேலாண்மை செயல்திறன் தமிழர்களின் ஈடு இணையற்ற சாதனையாகும் இதனை நோக்கும் இடத்து நான்மணிக்கடிகை கூறும் பாடல் அடிகளுக்கு ஏற்ப நீர் மேலாண்மைத் திறன் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. இத்தகு சிறப்புடையை ஏரிகள் குளங்கள் மடைகள் ஆகியவற்றை சரியாக பராமரிப்பதன் மூலம் நீரினை நாம் சேமிக்க முடியும்.

**நீரின் இன்றியமையாமை**

உலகில் உள்ள ஒவ்வொரு உயிர்களின் இயக்கத்திற்கும் மிகவும் இன்றியமையாதது நீராகும், அத்தகைய நீரின் இன்றியமையாமையை பற்றி இப்பத்தியில் காண்போம். சங்க காலத்தில் மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வேறுபட்ட நிலங்களில் வாழ்ந்து வந்தனர். அந்த ஐந்து வகை நிலங்களில் பாலை நிலம் நீரின் தேவையை உணர்த்துகிறது.

**கல்லுடைப்படுவிவல் கலலுழிதந்து**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

**நிறைப்பெயல் அறியாகா குறைக்கூண் அல்லில் (நற்றிணை, பா. 33)**

என்னும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றது. நீண்ட மலைச்சாரலில் வன்மையான நிலத்தில் அமைந்த சிறு குடிசையில் அச்சம் மிகுந்து காணப்படும் அவ்வழியில் கற்குளழிகளில் கலங்கல் நீர் தேங்கி இருக்கும். அக்கலங்கள் நீரை துறவிகள் உணவாக உண்டு வாழ்ந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் மேலும் பாலை நிலத்தில் வறட்சியான காலகட்டங்களில் கிணற்றிலிருந்து நீரை எடுத்து சேமித்து வைக்கும் பழக்கமும் பண்டைய காலத்தில் இருந்துள்ளது. ஊர் மக்கள் அனைவரும் அருந்துவதற்கு குளத்தில் உள்ள நீரையும் பயன்படுத்தியுள்ளனர். மனிதன் வாழ்வதற்கு உணவு மிக முக்கிய பங்கு வகிக்கிறது அந்த உணவு விவசாயத்தின் மூலமே கிடைக்கிறது விவசாயத்தின் தேவையை,

**சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை (திருக்குறள் - 20)**

என்ற குறள், உலகம் பல தொழிலை செய்து சுழன்றாலும் ஏர் தொழிலின் பின்தான் நிற்கின்றது அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே முதன்மையானது என்பதை உணர்த்துகின்றது. நிலத்தில் உளவை மேற்கொள்வதற்கும் விவசாயத்திற்கும் மழை நீரை மூல ஆதாரமாக திகழ்கிறது. இதனை சங்கப்பாடல்,

**அறத்தோடு பொருந்திய உலகுத் தொழில் கொளீஇய**
**பழமழை பொழிந்த புதிர் அவல (நற்றிணை, பா. 25)**

என்ற நற்றிணை பாடல் மூலம் அறிய முடிகின்றது. நீரில்லாமல் வாழ முடியாது. இவ் உடலுக்கு உணவு கொடுத்தவர்கள் தான் உயிர் கொடுத்தவர்கள் ஆவார்கள், மேலும் உணவு என்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடிய நீரினையும் குறிக்கும் ஏனென்றால், **நிலத்தையும் நீரினையும் அடிப்படை ஆதாரமாகக் கொண்ட விவசாயம் மூலம் தான் உணவுப் பொருள்களை விளைவித்தனர், என்று நீரின் இன்றியமையாமை பற்றிய கருத்தினை முனைவர் ஆர். சிவராமன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (ப. 81 ).** இறைவனின் படைப்பில் உள்ள ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குவது நீராகும் என்ற தகவலானது இப்பத்தியில் இருந்து வெளிப்படுகிறது.

**நீர்மாசுபாடு**

நீர் மாசடைதல் அல்லது நீர் மாசுபாடு என்பது ஏரிகள், ஆறுகள், கடல்கள், நிலத்தடிநீர் என்பன போன்ற நீர் நிலைகள் மனித நடவடிக்கைகளால் தூய்மை இழப்பதை குறிக்கும். நீரின் இயற்பியல், வேதியல் உயிரியல் பண்புகளில் மாறுதல்கள் நிகழ்வதனால் மாசுபாடு நீர்நிலைகளில் கரிம மற்றும் கனிம பொருள்கள் சிதைவுறுதல் நீர்நிலைகள் மாசுபட பெரிதும் வழி வகிக்கிறது, தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவுநீர், சாக்கடைநீர்,

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

வீட்டுக்ககழிவு நீர், கதிரியக்க நீர் கழிவுகள், மற்றும் கச்சா எண்ணெய் நீர் போன்றவைகள் நீரை மாசுபடுத்துகிறது. மேலும், நீர் மாசுபாடு அடைதல் பற்றிய செய்தியை பிரியங்கா, ரமேஷ் சந்திர திவாரி, மனிஷா தீட்சித், பாவனா மிட்டல், வேத் பூஷன் சர்மா ஆகியோர்,

> **இயற்கையில் சுத்தமான நீர் கிடைப்பதில்லை. இது இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அசுத்தங்களைக் கொண்டுள்ளது. இயற்கை அசுத்தங்கள் அடிப்படையில் ஆபத்தானவை அல்ல, ஆனால் மனித நடவடிக்கைகள் நீர் மாசுபாட்டிற்கு தீவிர காரணமாகும். நீர் மாசுபாடு என்பது நீர்நிலைகளின் நீர் மாசுபாடு ஆகும், பொதுவாக மனித நடவடிக்கைகளின் விளைவாக, அதன் முறையான பயன்பாடுகளை எதிர்மறையாக பாதிக்கும் வகையில். நீர் மாசுபாடு சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குவதற்கான நீரின் உடலின் திறனைக் குறைக்கிறது. அசுத்தங்கள் இயற்கை சூழலில் அறிமுகப்படுத்தப்படும் போது நீர் மாசுபடுகிறது. (பிரியங்கா et.al (மொழிபெயர்ப்பு). பக். 63)**

**நீர் மாசுபாட்டினை தடுக்கும் முறைகள்**

மனித வாழ்வின் அடிப்படை அங்கமாக விளங்கும் நீரானது பல்வேறு வழிகளில் மாசுபடுகிறது. நீர் மாசுபாட்டினை தடுக்கும் முறைகளை பற்றிய செய்திகளை இப்பத்தியில் காண்போம். நீர் மனித வாழ்க்கையின் இன்றியமையாத அடிப்படை தேவையாக அமைந்துள்ளது உணவு, உடை, உறைவிடம் எனும் அடிப்படைத் தேவைகளை உருவாக்குவதில் நீரே பெரும்பங்கு வகிக்கிறது அதனாலேயே நீர் நிலைகள் பழந்தமிழ் மக்களால் பாதுகாக்கப்பட்டும், போற்றப்பட்டும் வந்துள்ளது. தூய நீர்நிலைகள் உள்ள இடங்களில் அசுத்தங்கள் செய்யாது இருத்தல் வேண்டும் எனும் நல்லொழுக்கத்தை வலியுறுத்துகின்றன, மேலும் பசும்புள், விளைநிலங்கள், பசுவின் சாணம், செல்லும் வழிகள், இடுகாடு, தூய நீர் நிலைகள், ஆலயங்கள், நிழல் உள்ள இடங்கள், பசுக்கள் வாழும் இடங்கள், சம்பா ஆகிய பத்து இடங்களிலும் எச்சில் உமிழ்தல், மலஜலம் கழித்தல் ஆகிய அசுத்தங்கள் செய்யக்கூடாது என்பதை,

> **புல், பைங்கூல், ஆப்பீ, சுடலை, வழி**
> **சோரார் - உணர்வு உடையார் (நற்றிணை, பா. 37)**

என்னும் பாடல் வரிகள் உணர்த்துவதை காணலாம். தாயைப் பலித்தாலும் தண்ணீரை பலிக்காதே எனும் பழமொழியும் நீரின் கண் அசுத்தங்கள் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்துகிறது. இன்றைக்கு சிற்றூர்களிலும் நகரங்களிலும் தூய நீர்நிலைகள் பெருமளவு மாசுபடுவதற்கு காரணம் நீர்நிலைகளில் மனிதர்கள் செய்யும் அசுத்தங்களே என்பது நிதர்சனமான உண்மையாகும். நீராடும் முறை குறித்து கூறும் பெருவாயில் முள்ளியார் நீரில்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

ஊமிழல் கூடாது என்பதை வேறு சில பாடல்களிலும் வலியுறுத்தியுள்ளார். நெறிப்பட்ட ஆராய்ச்சி அறிவினை உடையவர்கள் நீராடும் பொழுதில் நீந்துதல், நீரில் விளையாடுதல், நீரின் கண் அழுந்தியிருத்தல், தலையில் எண்ணெய் இல்லாமல் காய்ந்திருக்கும் பொழுது கழுத்தளவு மட்டுமே நனையும்படி குளித்தல், போன்ற நீர்நிலைகளை மாசுபடுத்தும் செயல்பாடுகளை செய்ய மாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். **முறையான சுத்திகரிப்புக்குப் பின்னரே ஆறுகள் மற்றும் ஏரிகளில் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றுவதன் மூலம் நீர் மாசுபாட்டைத் தடுக்க முடியும். (பிரியங்கா et.al (மொழிபெயர்ப்பு). பக். 67)** இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையாக விளங்கும் பல தொழிற்சாலைகள் தங்களது ரசாயன கழிவுகளை நீர் தேக்கங்களிலும் ஏரிகளிலும் கலக்கும்படி செய்வதை நிறுத்துவதன் மூலமும் நீர் மாசுபாட்டினை பெருமளவு தடுக்க முடியும்.

**முடிவுரை**

செவ்வியல் இலக்கியங்களில் மக்கள் நீரினையே முதன்மை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்ததை உணர முடிகிறது. நீரினை மேலாண்மை செய்தும் சிறப்பு செய்தும் வாழ்ந்துள்ளனர் என்பதை மேல்கண்ட ஆதாரங்கள் மூலம் அறிய முடிகிறது. மேலும், மனித ஒழுக்கம், உணவு, பண்பாடு, சடங்கு, வழிபாடு, நம்பிக்கை, திருவிழா என மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரையிலான அனைத்து நிகழ்வுகளிலும் நீர் முக்கியமான பண்பாட்டு அடையாளமாக தமிழர் வாழ்வில் விளங்குவது என்பதையும் அத்தகய சிறப்பு வாய்ந்த நீரினை சேமிக்கும் முறையையும், நீர் மாசுபாட்டிலிருந்து அவற்றை தடுக்கும் முறைகளையும், பாதுகாக்கும் வழிகளையும் இக்கட்டுரையானது எடுத்துரைத்துள்ளது.

**துணை நூற்பட்டியல்**

[1] ஔவை துரைசாமிப்பிள்ளை, சு. (உ.ஆ). *புறநானூறு*. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை, இரண்டாம் பதிப்பு - 1962.

[2] நாகராஜன், வி. *நற்றிணை மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை - 600098, 2007.

[3] பரிமேலழகர் உரை. *திருக்குறள்*. மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை - 18.

[4] பாலசுப்பிரமணியன், கு.வெ. *அகநானூறு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை - 600098, முதற்பதிப்பு - 2007.

[5] பாலசுப்பிரமணியன் பிள்ளை, (உ.ஆ.,). *நான்மணிக்கடிகை*. சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி - 1965.

[6] புலியூர் கேசிகன் (உ.ஆ). *பரிபாடல் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம் சென்னை- 14.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 6, Issue - 2, January 2024 Available at: www.ijtlls.com

[7] மோனோலிசா. "சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை." *அரண் பன்னாட்டு ஆய்வு இதழ்,* 08 Oct 2019. https://aranejournal.com/article/5834 17.10.23 அன்று அணுகப்பட்டது.

[8] *6.1 நீர்நிலைகள்.* www.tamilvu.org/courses/degree/c031/c0314/html/c0314661.htm 17.10.23 அன்று அணுகப்பட்டது.

[9] Priyanka, Ramesh Chandra Tiwari, Manisha Dikshit, Bhawana Mittal, Ved Bhushan Sharma. "Effects of Water Pollution - A Review Article." *J Ayu Int Med Sci*. 2022; 7(5): 63-68. Available From https://jaims.in/jaims/article/view/1864 17.10.23 அன்று அணுகப்பட்டது.

## References

[1] Avvai Duraisamipillai. *Purananooru Moolamum Uraium*. Saratha Pathippagam, Chennai - 600001.

[2] Nagarajan, V. Natrinai Moolamum Uraiyum. NCBH, Chennai - 600098, 2007.

[3] Parimelazhgar Uurai. *Thirukkural*. Manikkavasakar Pathippakam, Chennai - 600108.

[4] Balasubhramaniyan, K. V. *Akananooru Moolamum Uraiyum*. NCBH, Chennai - 600098.

[5] Bhalasubhramaniyan Pillai (U.A). *Nanmanikkadikai*. Saivasiththantha Norpathippu Kalakam, Thirunelveli, 1965.

[6] Puliyoorkesigan. (U.A). *Paripadal Moolamum Uraiyum*. Saradha Pathippakam. Chennai- 14.

[7] Monalisha. "Sanga Ilakiyathil Neermelanmai." *Aran Pannattu Aivithal*, 08 Oct 2019. https://aranejournal.com/article/5834 Accessed on 17.10.23.

[8] *6.1நீர்நிலைகள்.* www.tamilvu.org/courses/degree/c031/c0314/html/c0314661.htm Accessed on 17.10.23.

[9] Priyanka, Ramesh Chandra Tiwari, Manisha Dikshit, Bhawana Mittal, Ved Bhushan Sharma. "Effects of Water Pollution - A Review Article." *J Ayu Int Med Sci*. 2022; 7(5): 63-68. Available From https://jaims.in/jaims/article/view/1864 Accessed on 17.10.23.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.